

தமிழ்நாடு அரசு
இந்து சமய அறநிலையத்துறை

# அருள்மிகு
# கற்குவேல் அய்யனார்
# திருக்கோயில்

குதிரைமொழிகிராமம், தேரிக்குடியிருப்பு,
திருச்செந்தூர் வட்டம், தூத்துக்குடி மாவட்டம்
(1426)

tnhrce.org

# பங்குனி உத்திர திருவிழா அழைப்பிதழ்

**8.4.2017 முதல் 9.4.2017 வரை**

“தாரணிநற் குதிரைமொழி சார் தேரிக்
குடியிருப்பில் தழைத்தே ஓங்கும்

காரணிநற் சோலைவனக் கோயிலே
திருவருளின் காட்சி நல்கிப்

tnhrce.org

பூரணைநற் பொற்கலையும் புடை சூழப்
புவனவுயிர் அனைத்தும் காக்கும்

காரணனே ! கற்குவே லய்யனே
எங்களையுங் காப்பாய் போற்றி”

# அருள்மிகு கற்குவேல் அய்யனார் திருக்கோயில்

## குதிரைமொழி கிராமம், தேரிக்குடியிருப்பு, (அஞ்சல்)

பேரன்புடையீர்,

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளுள் ஒன்றான திருச்செந்தூர் திருத்தலத்திற்கு தென்மேற்கே காயாமொழி அருகில் குதிரைமொழி கிராமம் தேரிக்குடியிருப்பை ஒட்டியுள்ள வனப்பகுதியில் அருள்மிகு கற்குவேல் அய்யனார் திருக்கோயில் அமைந்துள்ளது.

பாலைவனத்தில் பசுஞ்சோலை போல இந்த ஆலயத்தைச் சுற்றிலும் செம்மண் தேரிக்குன்றுகள் சூழ்ந்திருக்க இந்த ஆலயம் அமைந்துள்ள பகுதி மட்டும் சமதளப் பரப்பில் அழகுடன் அமைந்துள்ள காட்சி பார்ப்பவர்களை பரவசப்படுத்துகிறது. சுமார் 152.78 ஏக்கர் நிலத்தை தன் உடமையாகக் கொண்டு வனத்துறைக் காட்டுப்பகுதியின் மத்தியில் இந்த ஆலயம் அழகுடன் அமைந்துள்ளது. இங்கு அய்யனாரின் கருணை ஒரு காட்டாற்று வெள்ளம் போல ஆனந்த வீச்சுடன் வெளிப்பட்டு அய்யனாரின் பொற்பாதம் பற்றிய அனைவரையும் தழைத்துச் செழிப்படையச் செய்கிறது. பூரணம், பொற்கலை ஆகிய இரு தேவியருடன் அடர்ந்த வனப்பகுதியில் அருளாட்சி செய்கிறார் அய்யன். பேச்சியம்மன், வன்னியராஜா, குலசேகர ராஜா, சுடலைமாடன் ஆகிய எண்ணற்ற வன தேவதைகளும் இங்கு எழுந்தருளி அருளாட்சி புரிகின்றனர்.

tnhrce.org

இத்தகைய சிறப்பு மிக்க கற்குவேல் அய்யனாரின் பங்குனி உத்திர திருவிழா துர்முகி வருடம் பங்குனி மாதம் 26–ம் தேதி 8–4–2017 ஆரம்பமாகி பங்குனி மாதம் 27–ம் தேதி 9–4–2017 வரை நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ளவாறு நடைபெறுகிறது. பக்தர்கள் அனைவரும் இவ்விழாவில் பங்கு கொண்டும் காணிக்கைகளை செலுத்தியும் அருள்மிகு கற்குவேல் அய்யனாரின் பேரருள் பெற வேண்டுகிறோம்.

க.விஸ்வநாத் பி.ஏ,பி.எல்.,
தக்கார்

சி.இசக்கியப்பன் பி.எஸ்.சி.,
செயல் அலுவலர்
04639–232530

# நிகழ்ச்சி நிரல்

## 8-4-2017 பங்குனி மாதம் 26-ம் தேதி சனிக்கிழமை

## பங்குனி உத்திர திருவிழா துவக்கம்

| | | |
|---|---|---|
| காலை 6.00 மணி | : | மாவிளக்கு பூசை நடைபெறும். |
| நன்கொடையாளர் | : | திரு. க.வள்ளி யாதவ் வ.நம்பிநாச்சியார் அம்மாள் குடும்பத்தினர், கோபாலசமுத்திரம் |
| இரவு 7.00 மணி | : | திருவிளக்கு பூசை நடைபெறும். |
| நன்கொடையாளர் | : | செல்லம்மாள் நினைவாக திருமலைநம்பி யாதவ் அய்யம்மாள் குடும்பத்தினர், சேரன்மகாதேவி. |

tnhrce.org

## 9-4-2017 பங்குனி மாதம் 27-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை

# பங்குனி உத்திரம்

| | | |
|---|---|---|
| காலை 9.30 மணி | : | தாமிரபரணி ஆற்று தீர்த்தம் கொண்டு வருதல் |
| நன்கொடையாளர் | : | திரு. தே.மா.காமாட்சி நாடார் – கா.ஆவுடைதங்கம்மாள் குடும்பத்தினர், சின்னமனூர், தேவாரம். |
| காலை 10.00 மணி | : | வில்லிசை – (சுவாமி கதை) |
| காலை 11.00 மணி | : | சுவாமி கற்குவேல் அய்யனார் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கு சிறப்பு அபிசேக ஆராதனைகள் |
| நன்கொடையாளர் | : | திரு.வே.கல்யாணி யாதவ் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, வி.மு.சத்திரம், திருநெல்வேலி – 11. |
| பகல் 12.00 மணி | : | அன்னதானம் |
| நன்கொடையாளர் | : | மாலை முரசு அதிபர். திரு.இரா.கண்ணன் ஆதித்தனார் வகையறா காயாமொழி. |
| மதியம் 1.00 மணி | : | அன்னதானம் |
| நன்கொடையாளர் | : | சென்னைவாழ் கோனாம்பட்டி நாடார் உறவினர் சங்கம், கோனாம்பட்டி |

tnhrce.org

- பங்குனி உத்திர திருவிழாவிற்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பி வைப்போருக்கு பங்குனி உத்திர பிரசாதம் தபாலில் அனுப்பி வைக்கப்படும். மணியார்டர் மூலம் அனுப்புவோர் நிர்வாக அதிகாரி, அருள்மிகு கற்குவேல் அய்யனார் திருக்கோவில், குதிரைமொழி கிராமம், தேரிக்குடியிருப்பு (அஞ்சல்), திருச்செந்தூர் வட்டம் - 628 205 என்ற முகவரிக்கு அனுப்ப கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

- பக்தர்கள் தங்கள் காணிக்கை ரொக்கத்தினை ஆலய உண்டியல்களில் சேர்க்குமாறும், காணிக்கைப் பொருட்களை ஆலய அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

tnhrce.org

- பக்தர்களுக்கு குளிக்கவும், குடிக்கவும் தண்ணீர் வசதிகள், தங்குவதற்கும் பந்தல் மற்றும் ஒலி, ஒளி அமைப்புகள் ஆகியன விரிவான முறையில் செய்யப்பட்டுள்ளன.

- பங்குனி உத்திர திருவிழாவை முன்னிட்டு திருச்செந்தூரிலிருந்து கோயில்வரை பக்தர்கள் வந்து செல்ல சிறப்பு பேருந்துகளை அரசு போக்குவரத்து கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

- **"கண்ணன் சிற்றூந்து"** தினசரி திருச்செந்தூரிலிருந்து கற்குவேல் அய்யனார் கோயில், வரை இயங்கி வருகிறது.

## நித்திய பூசை கட்டளை வேண்டுகோள்

ஒரு நாள் பூசை கட்டளைக்கு **ரூ.2000/-** வீதம் பெற்று இத்தொகையை முதலீடு செய்து கிடைக்கும் வட்டியிலிருந்து இக்கட்டளையை பாரம்பரியமாக நிரந்தரமாக செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த கைங்கரியத்தில் பங்கு கொள்ள விரும்புவோர் எந்த தேதியில் இந்த கட்டளை செய்யப்பட வேண்டுமென ஆங்கில தேதி குறிப்பிட்டு அதற்கான **ரூ.2000/-ஐ** டிராப்ட் மூலம் "நிர்வாக அதிகாரி, அருள்மிகு கற்குவேல் அய்யனார் திருக்கோவில், குதிரைமொழி கிராமம், தேரிக்குடியிருப்பு (அஞ்சல்), திருச்செந்தூர் வட்டம் - 628 205 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

tnhrce.org

## அன்னதானத் திட்ட வேண்டுகோள்

தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட நன் கொடையாளர்கள் பங்கேற்புடன் கூடிய மதிய உணவு வழங்கும் அன்னதானத் திட்டம் இத்திருக்கோயிலில் தொடங்கி தினசரி 50 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. இத்திட்ட செலவாக நாள் ஒன்றுக்கு **ரூ.1500/-** செலுத்தி தாங்களும் இத்திட்டத்தில் நன்கொடையாளராகப் பங்கேற்று அன்னதானம் செய்யலாம். இதனையே நிரந்தர வைப்பு நிதியாக **ரூ.15,000/-** முதலீடு செய்தால் ஆண்டு ஒன்றுக்கு ஒருநாள் தாங்கள் விரும்பும் நாட்களான பிறந்த நாள், திருமணநாள் என வாழ்நாளில் முக்கிய நாட்களிலும் அன்னதானம் செய்து மனநிறைவும்,இறையருளும் பெறலாம்.

ஆண்டுக்கு ஒருமுறை திருவிழா

அய்யனின் பங்குனி உத்திர பெருவிழா

நாள்தோறும் தங்கள் வாழ்வில்

நலம் தரும் விழா காண வருகைதரும்

பக்தர்களுக்கு எமது நல்வாழ்த்துக்கள்!

tnhrce.org

அழைப்பிதழ் உபயம்:

**ஐ.வைரவ ஆனந்தம் அன் கோ**

**கிளியரிங் அன் கேன்வாஸிங் ஏஜென்சி**

**11, ஆனைக்காரன் தெரு, சென்னை – 600 001.**